முருகப்பெருமான் துணை

**மகான் வால்மீகி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.04.2024,** வியாழக்கிழமை

1. காரண காரிய குருவாக வந்து
கலியினில் மக்களை தேற்றுகின்ற
ஆறுமுக அரங்கமகா ஞானியே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே குரோதி தகரின் திங்கள்
குறைவிலா பஞ்சதிகதி குருவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 05 ம் நாள், 18.04.2024, வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க வால்மீகி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் ஞானமக்களை கலியில்
ஞானவழிகாட்டி தேற்றுவேனென
ஞான தேசிகன் அருளிவர
4. வருகின்ற காலம் உலகினில்
வடிவேலன் வழிபாடு பெருகி
தருமபலமும் வளர இருக்க
தரணியோர் வணங்கி வருக
5. வருகவே அரங்கன் ஆசிபலம்
வையகத்தை வளமாக்கி நின்று
தரும சேவையும் சிறந்துமே
தரணியோர் மாற்றம் காணநேரும்
6. நேருமை கொண்ட ஆளுமையும்
நீதி நெறி குன்றா சமூகமுமாக
வருங்காலம் மாறிட இருக்க
வழிகாட்டும் அரங்கன் உபதேச
7. உபதேச சன்மார்க்க வழியுடன்
உயிர்கொலை நீக்கி வாழ்ந்திட
அபயமென அரங்கனிடம் சரணாகதி
அனைவரும் கண்டு வருக

8. வருகவே உலகோரிடை மாற்றம்
வரமாக வந்தடைய நேரும்
பெருமை சேர்க்கும் தலைமையை
பேதமற உருவாக்குகின்ற வண்ணம்
9. வண்ணமுடன் கட்டமைப்பு பெருகி
வரலாற்றை மாற்றும் படியாக
அண்ணல் அரங்கன் தவசக்தி
ஆற்றலாகப் பெருகி இனிதே
10. இனிதே ஞானத் தலைமையும்
எல்லாம் எதிலும் சமம் என்கின்ற
கனிவேலவன் ஆசி பலமும்
கருணையும் கூடி உலகினில்
11. உலகினில் ஞானவான்கள் ஆட்சி
உருவாகி மானிட ஆட்சிமுறை
வழக்கங்கள் முடிவுற்று மாறும்
வழங்கிய துல்லிய ஆசி முற்றே

–சுபம்–